# ஆகஸ்ட் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.08.2016 | காலை 5.30 மணி | வாக்குதத்த ஆராதனை | - - | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 07.08.2016 | காலை 8.30 மணி | கைம்மாறு கருதாமல் கொடுத்தல் திருவிருந்து ஆராதனை | ஆதி 13:8 – 18 மாற்கு 14: 3 – 11 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 14.08.2016 | காலை 8.30 மணி | பெண்களின் திருப்பணியை நினைவு கூறுதல் திருவிருந்து ஆராதனை | லூக்கா 8 : 1 –3 | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 21.08.2016 | காலை 8.30 மணி | கடவுளும் இறைப்பற்றாளர்களும் | ஆமோஸ் 9 : 1 – 12 யோவான் 10 : 14 –18 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 28.08.2016 | காலை 8.30 - 1.00 மணி வரை | **பெண்கள் சிறப்பு ஞாயிறு** | | சிறப்பு செய்தியாளர் |

## ஆகஸ்ட் மாதம் – 2016

# ஆயர்மடல்

தந்தை மைந்தன் தூய ஆவியின் திருப்பெயரால் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம் உங்கள் அனைவரின் வாழ்விலும் நன்மையும் ஆசிர்வாதமும் தொடர வேண்டுகிறேன். விஷேசமாக கொண்டாடப்படப்போகின்ற அறுவடை திருநாள் விழாவிற்காகவும் மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் விழாவிற்காகவும் ஜெபிக்கவும் உதாரத்துவமாய் காணிக்கைகளை கொடுக்கவும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக

அருட்பணியில் உங்கள் ஆயர்

**Rev.Daniel Chelladurai**

August ’2016

## கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

# பாவ சஞ்சலத்தை நீக்க

# பாமாலை - 376

## (What a friend we have in Jesus)

“சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுள்ள முண்டு ”. நீதி 18:24

நமது சந்தோஷங்களையும் துக்கங்களையும் நம்மோடு பகிர்ந்து கொள்ள கூடிய ஒரு நண்பராவது நமக்கு இருக்க வேண்டுமேன்று நாம் விரும்புகிறோம். நம் சந்தோஷ காலங்களில் பல நண்பர்கள் நம்மோடு கலந்து கொள்ளுவது இயல்பு. ஆனால் நாம் துக்கங்களிலும், இடுக்கண்களிலும் இருக்கும்போது நம்மிடம் அனுதாபம் காட்டுகிறவர்கள் மிகக் குறைவு. நாம் நம்பியிருக்கிற நண்பர்களும், உறவினரும் நம்மைக் கைவிட்டு, நாம் தனியாக நிற்கும் அனுபவங்கள் ஏராளமுண்டு. ஆனாலும், நம்மைக் கைவிடாத ஒரு நண்பருண்டு நமது ஆண்டவராகிய இயேசு ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை வியாதியோ, வறுடையோ, வேறு எந்தவிதமான துன்பமோ நமக்கு வந்தாலும் அவர் நம்மைக் கைவிடாத நண்பராவார். ஆகையால், விசுவாசத்தோடு ஊக்கமான ஜெபத்தால் அவரை அண்டிச் சேர்வோமாக.

இப்பாடலை எழுதிய ஜோசப் ஸ்க்ரிவன் என்பவர், 1819 - ஆம் ஆண்டு அயர்லாந்தில் சீப்பாட்ரிக் என்னுமிடத்தில் பிறந்தார். இளமைக் கல்வியை ஊரிலேயே முடித்தபின் டப்ளின் நகரில் திருத்துவ கல்லூரியில் பயின்று தேறினார். ஆஸ்தியுள்ள குடும்பத்தினராதலால் தன் சொந்த ஊரிலேயே சௌகரியமாக வாழ்க்கை நடத்தியிருக்கலாம். ஆனால் 1845-ல் அவர் 25 வயதாயிருக்கையில் கடல் கடந்து, கனடா நாட்டில் குடியேறி, முதலில் றைஸ்லேக் நகரிலும், பின்னர் ஹாமில்டன் நகரிலும் தனி ஆசிரியராகப் பணி புரிந்தார். அவர் காதலித்து, மணம்புரிய நிச்சயத்திருந்த பெண், மண நாளுக்கு முந்தின நாள் திடிரென ஒருவிபத்தில் அகப்பட்டு நீரில் விழுந்து இறந்து விட்டதால், அவர் ஆறாத்துயரத்தினால் அயல் நாட்டில் குடியேறினார் என்று கூறப்படுகிறது. இவ்வாறாகத் துயரமே அவரைக் கிறிஸ்துவிடம் திருப்பியது.



இத்துயரத்திலிருந்து தன் மனதை திருப்புவதற்காக அவர் கவிகள் எழுத ஆரம்பித்தார். அவர் கவிகள் எழுதுவது அவரது நெருங்கிய நண்பர்களுக்கு கூட தெரியாது. ஒரு முறை தன் தாயாருக்கு ஏற்பட்ட ஒரு ஆழ்ந்த துயரத்தில் ஆறுதல் அளிப்பதற்காக, அவர் பாவ சஞ்சலத்தை நீக்க என்னும் பாடலை எழுதி, தானும் தன் தாயாரும் மட்டும் தனிமையாகப் பாடி வந்தனர். இதைப் பிரசுரிக்கவோ, மற்றவர்களுக்குக் காட்டவோ அவர் விரும்ப வில்லை தமது வாழ்க்கையின் சொந்த அனுபவத்திலிருந்தே அவர் இப்பாடலை எழுதியுள்ளார்.

அநேக ஆண்டுகளுக்குப்பின், அவர் மரணப்படுக்கையிலிருக்கும்போது இப்பாடலின் கைப்பிரதி அவரது படுக்கையறையிலிருந்து எடுக்கப்பட்டது. கவித்திறமையே இல்லாத அவர், இப்பாடலை எப்படி எழுத முடிந்தது என்று அல்வரை வினவியபோது. என் ஆண்டவரும் நானும் சேர்ந்து இதை எழுதினோம். எனப் பதிலளித்தார்.

அவரது கடைசிகாலம் சுகவீனம் வறுமை மனவியாகுலம் முதலிய வற்றால் நிரம்பியிருந்தது. இறுதியில் 1886-ஆம் ஆண்டு, தமது 66-வது வயதில் றைஸ்லேக் என்னும் ஊரில் ஒரு சிற்றாற்றில் தவறி விழுந்து மூழ்கி காலாமானார். ஆயினும் ஆவர் எழுதிய இந்த ஒரே பாடல், அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான மக்களுக்கு, துன்பத்தில் மிகுந்த ஆறுதலை அளித்து வருகிறது.

**- Nishada’s**

ஆதாரம்:
1.கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு – **Mr.D.EBENKAN**
2. Various internet articles

**வாழ்வின் நெறிகள்....**

திறமை என்பது
கடவுளால் கொடுக்கப்பட்டது
அடக்கத்துடன் இருங்கள்,

புகழ் என்பது
மனிதரால் கொடுக்கப்பட்டது
நன்றியுடன் இருங்கள்

தற்பெருமை என்பது
நமக்கு நாமே கொடுத்துக் கொண்டது
எச்சரிக்கையுடன் இருங்கள்...

# பெண்கள் சிறப்பு ஞாயிறு - 2016

நாள்: 28.08.2016

நேரம்: காலை 8.30 மணி & 11.00 மணி – 1 மணி வரை

# சிறப்பு செய்தியாளர்

## மதிய உணவு உண்டு

# அறுவடை திருநாள் - 2016

## HARVEST FESTIVAL - 2016

நாள்: 04.09.2016

நேரம்: காலை 8.00 மணி முதல் 1.00 வரை

## திண்பண்டங்கள், காலை உணவுகள் பிரியாணி மற்றும் ஏல விற்பனை



## பலன் எதிர்பாராமல்

மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளி ஒருவர், தன்னை மிகவும் அக்கறையோடு கவனித்தற்காக மருத்துவரை மிகவும் மெச்சினார். அதற்கு அந்த மருத்துவர் நான் என் கடமையைத்தான் செய்தேன் என்றார். அதற்கு அந்த நோயாளி நீங்கள் மருத்துவம் மட்டும் பார்க்க வில்லை. என்னிடம் மிகவும் அன்புடன் பேசிப்பழகி எனக்கு ஆறுதலாயிருந்தீர்களே என்றார். அதற்கு அந்த மருத்துவர் அது என்னுடைய பணிக்கு தேவையான மிக முக்கியமான கடமை முக்கியமான கடமைகளில் ஒன்றல்லவா என்றார்.

வாழ்க்கையில் நாம் செய்யும் சில நல்ல செயல்களையும், நாம் வெளிப்படுத்தும் நல்ல சுபாவங்களையும் பார்த்து ஏதோ மிக அபூர்வமான விஷயங்களைச் செய்வதாக நாம் எண்ணிவிடுகின்றோம். எனவே அதற்காக நாம் மற்றவர்களின் நன்றியுணர்வுகளையும், பாராட்டுகளையும், அதிகமாக எதிர்பார்க்கின்றோம். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயல்களுக்கும் புகழுரைகள் தேவை என எண்ணுகின்றோம்.

ஆனால் நாம் நல்லது செய்வதும், நற்குணங்களை வெளிப்படுத்துவதும் நம்முடைய நியாமான கடமைகளில் ஒரு பகுதியே. அது நாம் உண்மையில் மனிதர்கள் என்பதை அடையாளப்படுத்துவதற்கு அவசியமானவையே. மனிதன் தன்னை மனிதன் என்று அடையாளங்காட்ட அவனுக்கு மிகத் தேவையானவைகள் நற்குணங்கள். அதனை நாம் வெளிப்படுத்தாவிட்டால், நாம் மனிதப் போர்வையில் இருந்தாலும் மனிதர்கள் அல்ல.

நாம் அன்பு காட்டுவதற்காக மற்றவர்கள் பரிசு தரத் தேவையில்லை. நாம் நன்மை செய்வதற்காக யாரும் பாராட்டு விழா நடத்தத் தேவையில்லை. நாம் நீதி நேர்மையாய் நடந்து கொண்டதற்காக யாரும் புகழ்ந்து கொட்ட தேவையில்லை. ஏனென்றால் இது போன்ற நற்குணங்களை வெளிப்படுத்தும்போது அதனால் நமக்குள்ளே ஒரு மகிழ்ச்சி கிட்டுகிறது. தேவனும் நாம் செயல்பட வேண்டிய விதமாகச் செயல்படுவதால் நம்மை ஆசீர்வதிக்கின்றார். எனவே மனிதர்களின் பாராட்டும் புகழ்ச்சியும் கட்டாயமல்ல.

சூரியன் பிரகாசிக்க வேண்டும். காற்று வீச வேண்டும். மரங்கள் கனிதர வேண்டும். மனிதன் கடவுளின் சாயலை வெளிப்படுத்த வேண்டும். இவை கடமைகள். பாராட்டுதல்களுக்காக நடக்கின்றவைகள் அல்ல. நாம் எதையாவது எதிர்பார்த்து நல்லதைச் செய்தால் நல்லதைச் செய்யும் இயற்கைப்பண்பு நமக்கு இல்லை என்று அர்த்தம். நாம் எதையாவது எதிர்பார்த்து நற்பண்புடையவர்களாக நடந்து கொண்டால், அவை இயற்கையாக நடைபெறாமல் செயற்கையாக நடைபெறுகின்றது என அர்த்தம் ஆகும். தேவனுடைய பிள்ளைகள் நாம் என்பதை விளங்கப்பண்ண யாருடைய பாராட்டுகளையும் எதிர்பாராமல் நாம் நற்குணமுடையவர்களாக விளங்க வேண்டும்

தொகுப்பு: **A.Joseph**

**S. PAUL** நீரோடை என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது

# வேத வினா - விடை போட்டி

## ஆகஸ்டு மாத கேள்விகள்

## முழு வேதாகமம் ( வசன ஆதாரம் தரவும் )

1. பொருத்துக

| | |
|---|---|
| i. திராக்கா | a. அஸ்பூக் |
| ii. எலியாக்கீம் | b. யோத்சதாக் |
| iii. நெகேமியா | c. தலைவன் |
| iv. இத்தோ | d. எத்தியோப்பிய இராஜா |
| v யோசுவா | e இலக்கிய |

6. கீழ்க்கண்டவைகளை வேதாகமத்தில் எங்கு வாசிக்கிறோம்? வசன இருபிடம் தரவும்?
   i. இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகள்
   ii. நேசம் என்னும் சமுக்காளம்
   iii. இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை
   iv. அவன் சத்தமிட்டு அமுதான்

10. 7000 + 3000 + 500 + 500 ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-08-2016**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை - 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com 9444 633129
**www.csinewlifeinjesus.org**


## பாராட்டுகிறோம்!

இராயபுரம் ஆலய சிறப்பு பெண்கள் கூடுகையில் கலந்து கொண்டு நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அனைத்து பெண்கள் ஐக்கிய சங்கம் உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்



# <u>சென்ற மாத போட்டியின் விடைகள்</u>

1. செப்பத்தா பள்ளத்தாக்கு 2 நாளா 14:9,10
2. ஆமாத் சோபா 2 நாளா 8:3
3. கேசேர் 1 நாளா 20:4
4. யாகாசு உபா 2 : 32
5. எருசலேம் தேவாலயம் உ இராசா 11 : 3
6. கப்பர் நகூம் ஜெப ஆலயம் யோவான் 6:59,60
7. ஆலோசனை சி. சங்கம் அப்போஸ்தலர் 6: 15
8. பெத்தானியா யோவான் 12: 1 -3
9. துரோவா அப்போஸ்தலர் 16: 8,9
10. நெகேமியா 7: 70 - 72

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
5. திருமதி. லீலா டிக்சன்
6. திருமதி. மெரில் ஜஸ்டின்
7. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
8. திருமதி. ரோஸ்லெட் செல்லன்

## படித்ததில் பிடித்தது

Locks are never
Manufactured,
Without a key,
Similarly God has never given
Problems without solution.
Only we need to have
Patience to unlock them.

Editor **A.Joseph**

## BIRTHDAYS IN THE MONTH OF AUGUST

| Date | Name |
|---|---|
| August 1 | Mr.S.Jenkins Danish |
| August 2 | Mr. S.Benkins Dinesh |
| August 3 | Master. R. Sam Gideon |
| August 5 | Mr.Yuvaraj Kalyana sundaram |
| | Mrs. M.Nirmala Kumari |
| | Mrs. Rupa Mary |
| August 6 | Mrs. Ketherine Kalpana.P |
| August 7 | Miss. A. Radhika |
| | Master. A.Kevin |
| August 8 | Miss. R. Hepsiba Blessy |
| August 11 | Mrs. M. Jesikant sujoini |
| August 12 | Mr. Paul Panneer Selvam |
| | Miss. R.Hepsiba Princy |
| August 15 | B.Gethsiyal Christina |
| August 16 | Miss. Felcy Jaffrin |
| | Mrs. Wilce Jesantha Daniel |
| | Mrs. A.Selvamalar |
| August 20 | Mrs. Dixcy Jeba Clara |
| August 21 | Miss. I.Helen Josephine |
| | Mrs.Glory Anbazhagan |
| | Master. B.Kevin Paul |
| | Miss. I. Sara Natasha |
| August 22 | Mr. D.Baskar |
| August 24 | Mr. Melki David |
| | Mrs.Nithya Priyadarshini |
| August 25 | Mr.A.Josewin |
| August 25 | Miss. Anbitha John |
| | Miss. A.J. Shekinah Jafflin |
| August 27 | Mr. J.John |
| | Mr.G.S.Titus Prabhakaran |
| August 28 | Mr. Joseph Rajah |
| August 31 | Mr.T.Selvaraj |
| | Mr.G.AnitlinJinish |




## WEDDING DAYS IN AUGUST

| Date | Couple |
|---|---|
| August 17 | Mr.E.K.Raj Kumar & Mrs. R.Daisy |
| August 18 | Mr.Alwyn Raj & Mrs. Megha |
| August 20 | Mr.S.John Jayapal Raja & Mrs. J. Esther Jayamani |
| August 21 | Mr.N.Nova Manuel Raj & Mrs. Flora Manuel |
| August 24 | Mr.D.Markas Joseph Pual & Mrs. M.Jesikanth Sujoini |

**பிறந்த நாள் மற்றும்**
**திருமண நாள் கொண்டாடும் அனைவருக்கும்**
**திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**





## பரிசுத்த வேதாகமத்தை குறித்து - தலைவர்கள்

**மகாத்மா காந்தி:**

எத்திசையில் செல்வது என்று நான் குழப்பமடையும் போதல்லாம் புதிய ஏற்பாடே எனக்கு வழிகாட்டியது.

**விக்டோரியா மகாராணி:**
இங்கிலாந்தின் வெற்றிக்கு காரணம் பரிசுத்த வேதாகமே

**கவிஞர் கண்ணதாசன்:**
நான் எழுதின இறவாத காவியம் இயேசு காவியமே

**ரோனால்ட் ரீகன் (அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி) :**
பரிசுத்த வேதாகமத்தின் இரு அட்டைகளுக்கு நடுவே மனிதனுடைய எல்லா பிரச்சனைக்களுக்கும் தீர்வு உண்டு

**சர் ஐசக் நியுட்டன் :**

இந்த சுவிசேஷத்தை எந்த சக்தியாலும் அழிக்க இயலாது.

**நீ ஒதுக்கப்படும் சபைகளில்**
**நிமிர்ந்து நில்.**
**நீ புகழப்படும் சபைகளில்**
**அடக்கமாய் நில்**
**நீ விமர்ச்சிக்கப்படும் இடங்களில்**
**நிதானமாக இரு**
**நீ நேசிக்கப்படும் இடங்களில்**
**அன்புடன் இரு**
**நீ ஜெயிக்கும் தருவாயில்**
**வேகமாகு**
**நி ஜெயித்த பிறகே**
**அதி வேகமாகு!**

# கிறிஸ்தவனுக்கு ஒரு மந்திரம்

உணர்வுள்ள மெய்பக்தன், தன்னை ஆள்பவனுக்கு,
பல்கோடி மானுடர்க்கு மாண்டவனுக்கு ஸ்தோத்திரம்
படைப்பதில், தத்தம் செய்வான்

திருப்தியுள்ள மெய்பக்தனின்,
மனதை மூடும் மகிழ்ச்சிக்கான ஆதாரம்.
ஸ்தோத்திரம்! என் ஆண்டவனுக்கு ஸ்தோத்திரம்!

ஆயிரம், பதினாயிரம் சிற்றிடர்கள்
வந்தாலும், கண்ணீர் சிந்தும் நேரத்திலும், ஊசியின் நுனி
துன்பத்திலும் மெய்பக்தன் சொல்வான் ஸ்தோத்திரம்!

மந்தையான மனுஷர், பொய்பக்தனை
சூழ்ந்த, கொல்வான்; மாயையின் மரணத்
தருவாயில் சொல்லேல் ஸ்தோத்திரம்!

விந்தையான இந்த மந்திரம், தன்னை
காக்கும் என நம்பிக்கையுள்ள விசுவாசபக்தன்
ஆள் மனதில் உரைப்பான், ஸ்தோத்திரம்!

ஜெபத்திலோ, விசுவாசத்திலோ சோர்வடையும்
வேளையிலும், சத்தமிட்டு ஊருக்கு நினைவுறுத்துவான்
மெய்பக்தன் அந்த மந்திரம்!

காரணமின்றி சோதனைகள், விசேஷமான
சூழ்நிலைகளை தாக்கும் போது,
ஸ்தோத்திரம் ஒன்றே விடுவிக்கும் என்ற

அனுபவம் இன்பம் பயக்கும்,இருளிலும்,
மெய்பக்தன் தன்னை வழி நடத்தும்!
ஸ்தோத்திரம் – அந்த மந்திரம்!

**- Poet Nishada's**



# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

ஹார்வுட் ரா மக்களுக்காக வாழ்வோம்



21.04.1871 - 10.10.1905

தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு முன்னேற்றப் பணியில் அயராது உழைத்தவரே ஹார்வுட்ரா.

மெதடிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த இவர், இங்கிலாந்தில் பிறந்தவர். இந்தியாவில் பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வம் மேலிட, இந்திய மண்ணை நோக்கி இளம் வயதில் புறப்பட்டு வந்தார்.

இவர் ஓர் அரிய பண்பாளர். எக்காரியமாயினும். நிதானத்துடனும், பொறுப்புடனும், பொறுமையுடனும் கனிவான அன்புடனும் அணுகுவார். சிறந்த நிர்வாகி ஆன்மீக வாஞ்சையுடன் எதனையும் சாதிப்பதற்கு தளராமல் ஜெபித்தவர். மக்களின் இன்னல்களை அனுபவப்பூர்வமாக அறிந்துணர்ந்து. அவைகளுக்கு ஏற்றப்படி உதவி செய்பவர்.

தன் வாலிப வயதிலேயே சென்னை மாநகரில் 5க்கும் மேற்பட்ட இடங்களில் ஆலயங்களை நிறுவினார். இங்கிலாந்தில் இதற்கென்று பெரும் பொருளாதார உதவியையும், தளவாட பொருளுதவியையும் பெற்று, எழில்மிகு ஆலயங்களைக் கட்டினார். சென்னை பிராட்வே வெஸ்லி தமிழ் ஆலயம், வேப்பேரியிலுள்ள இம்மானுவேல் மெதடிஸ்ட் ஆலயம், பெரம்பூர் பாரக்ஸ் சாலையில் உள்ள ஹார்வுட்ரா நினைவு ஆலயம் ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் சரளமாகப் பேசும் ஆற்றலும், பிரசங்கம் செய்யும் தாலந்தும் நிரம்பப் பெற்றவர், கட்டிடக் கலையிலும் சிறந்து விளங்கியவர். அருட்திரு. மோனகன், வில்லியம் கௌடி, கெல்லட் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் காலாரா என்னும் தொற்றுநோய் பரவியபோது, மக்களோடு மக்களாக இணைந்து, அவர்களுக்கு தொண்டு செய்தவர். அந்நோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு, சிகிச்சை அளிக்கும்போது தானும் அவ்வியாதியால் தாக்கப்பட்டார். வியாதியின் கொடுமை அதிகரிக்கவே தனது 34ஆம் வயதில் மாபெரும் சாதனைகளை கிறிஸ்துவுக்குள் நிகழ்த்தி. அமைதியாய் நித்திரையில் ஆழ்ந்தார்.

அன்பரே! கிறிஸ்துவின் பணியில், நீங்கள் உலகிற்கு வழங்கும் கொடை என்ன?

தொகுப்பு

**EVA. பால் பன்னீர் செல்வம்**



உஉளஉ